மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
வத்திராயிருப்பு
அசல் வழக்கு எண். 161 /2024

பி.வா.சா. 1 சுந்தர்

நாள் 05.11.2025

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி என்று சொன்னால் சரிதான். நானும், துரைராஜ் மற்றும் கருப்பையா ஆகியோர்கள் உடன்பிறந்தோர்கள் என்றால் சரிதான். கருப்பையா மனைவி 1வாதி ஆவார். 2, 3 வாதிகள் 1ம் வாதியின் வாரிசுகள் ஆவார்கள். சுப்பிரமணியம் பிள்ளை என்னுடைய தகப்பனார். இந்திராணி எனது தாயார். வாதிகள் என் மீது என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இந்த வழக்கின் எனது தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய யார் தகவல் சொன்னார்கள் என்றால் நானும் எனது சகோதரர் துரைராஜீம் தகவல் சொன்னோம். எத்தனை சொத்துக்களில் பாகம் கேட்டு இந்த வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மூன்று சொத்துக்களில் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு தாக்கல் செய்த சொத்திற்கான சர்வே எண் மற்றும் நான்கு மால் எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மூத்த சகோதரர் கருப்பையா 1993ம் வருடத்தில் காலம் சென்றார்.

எனது அப்பா உயிருடன் இருந்த காலத்திலேயே கடந்த 01.07.1946ம் வருடத்தில் எனது தாயாருக்கு ஒரு தான செட்டில் மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தான் செட்டில் மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் தான் வழக்குரை 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி தான செட்டில்

மெண்ட் பத்திரத்தில் எனது தாயார் சொத்துக்களை ஒருவரை விட்டு ஒருவர் தனியாக எவ்வித வில்லங்க பாரதீனம் செய்ய உரிமையில்லை என்று எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் எனது தாயார் உரிமை இருப்பதாக நினைத்துக் கொண்டு விற்றுவிட்டார். மேற்படி தான செட்டில் மெண்ட் பத்திரத்தினை எதற்காக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது தாயார் விற்பனை செய்துவிட்டதால் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி ஆவணம் எனக்கு விரோதமாக இருக்கும் என்பதால் தான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

வழக்குரை 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் கிராமத்தில் உள்ள கண்மாய் அருகே அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி 1 முதல் 3 அயிட்ட சொத்துக்கள் விவசாய நிலங்கள் என்றால் சரிதான். 4 முதல் 6 அயிட்ட சொத்துக்கள் திருப்பரங்குன்றம் கிராமத்தில் உள்ள குடியிருப்பு வீடுகள் என்று சொன்னால் சரிதான். வழக்குரை 7 வது அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ள சொத்து அயன்கரிசல்குளம் கிராமத்தில் அமைந்துள்ளது என்றால் சரிதான். 3 வது பிரதிவாதி பாண்டி வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி பாண்டியின் வாரிசுகள் தான் இந்த வழக்கில் 7 முதல் 10 வரையிலான பிரதிவாதிகள் என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும் பொழுது 4 வது பிரதிவாதி கிருஷ்ணன் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 4 வது பிரதிவாதியின் வாரிசுகள் தான் 5 மற்றும் 6 ம் பிரதிவாதிகள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது.

மூத்த சகோதரர் கருப்பையா உயிருடன் இருந்த வரையில் நாங்கள் அனைவரும் கூட்டுக் குடும்பமாக தான் வசித்து வந்தோம் என்றால் சரிதான். சகோதரர் கருப்பையா உயிருடன் இருந்த காலத்தில் கெமிக்கல்

கம்பெனியில் Fitter ஆக வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். தேங்காய் கடையில் வேலை பார்த்து வந்தேன் என்றால் சரியல்ல சொந்தமாக பெட்டிக்கடை வைத்திருந்தேன். எனது சகோதரர் துரைராஜ் திரையரங்கில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். கூட்டுக் குடும்பம் சம்பாத்தியத்தில் தான் வழக்குரை 4 வது அயிட்ட சொத்து எங்களது தாயாரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. கூட்டுக் குடும்பம் சம்பாத்தியத்தில் தான் வழக்குரை 5 வது அயிட்ட சொத்து எங்களது தாயாரின் பெயரில் கிரையம் வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

6 வது தபசில் சொத்து எனது தகப்பனார் காலம் சென்ற பிறகு எனது தாயாரின் பெயரில் வாங்கப்பட்டது என்று சொன்னால் எனது தாயாரின் தனிப்பட்ட சம்பாத்தியத்தில் இருந்து வாங்கப்பட்டது. எனது தாயார் சொந்தமாக தொழில் செய்து வந்து அந்த சம்பாத்தியத்தில் இருந்து சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொல்லியுள்ள நிலையில் எனது தாயார் வருமானத்தை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதி மன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவர் சொந்தமாக மெஸ் வைத்து நடத்தி வந்தார். மேற்படி எனது தாயார் மெஸ் நடத்தி வருமானம் ஈட்டியதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எனது தகப்பனார் சுப்ரமணிய பிள்ளை எந்த வருடத்தில் காலம் சென்றார் என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை. எனது தகப்பனார் உயிருடன் இருக்கும் பொழுதே வழக்குரை 4 மற்றும் 5 வரையிலான சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று சொன்னால் 2 சொத்துக்கள் மட்டும் தான் வாங்கப்பட்டது.

26.08.1993 அன்று எனது தாயார் இந்திராணி எனது பெயருக்கு வழக்குரை 4 மற்றும் 5 சொத்துக்களை பொறுத்து தான செட்டில்மெண்ட்

ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சுந்தரியும், அவரின் வாரிசுகளும் கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் அது எனது தாயாருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்பதால் கையெழுத்து செய்யவில்லை. சகோதரர் கருப்பையா காலம் சென்ற பின்பு சுந்தரி மற்றும் அவர்களது வாரிசுகளிடம் அடிக்கடி பிரச்சினை செய்து வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. 1997 வருடத்தில் ஜுலை மாதத்தில் சுந்தரியை பிரச்சனை செய்து வீட்டை விட்டு துரத்தி விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. சுந்தரியை நான் வீட்டில் இருந்து வெளியேற்றிய பின்பு அவர் அவருடைய சொந்த ஊரான சுந்தரபாண்டியத்தில் அவருடைய குழந்தைகளுடன் வசித்து வந்தார் என்று சொன்னால் சரியல்ல சுந்தரபாண்டியம் அவருடைய சொந்த ஊர்.

26.08.1993 ம் தேதி அன்று எனது தாயார் எனக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணமானது சகோதரர் கருப்பையா இறந்த ஒரு மாதத்திற்கு உள்ளே எனக்கு எழுதிக் கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் அது சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணமும் கருப்பையா இறந்த பின்னர் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. 26.08.1993 ம் தேதியில் எனது தாயார் சகோதரர் துரைராஜ்க்கு வழக்குரை 6 வது சொத்தைப் பொறுத்து ஒரு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். எனக்கும் எனது சகோதரருக்கும் ஒரே தேதியில் தான் எழுதிக் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களும் வாதிகளுக்கு வழக்குரை சொத்தில் உள்ள உரிமையை கொடுக்காமல் தவிர்ப்பதற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இரண்டு

ஆவணங்களிலும் சுந்தரியோ அல்லது அவரது வாரிசுகளோ சாட்சிகளாக கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் அவர்கள் ஊரிலேயே இல்லை. மேற்படி இரண்டு தான செட்டில்மெண்ட் ஆவணங்களும் 1வது வாதியின் சகோதரரின் திருமணம் நடைபெற்ற சமயத்தில் அவசரகதியில் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல.

பி.வா.சா.8 மற்றும் பி.வா.சா.9 ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல. கருப்பையா எங்களுடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். அவருக்கு வழக்குரை சொத்தில் எங்களுக்கு உரிமை உள்ளது போல அவருக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் அவர் அவருடைய பங்கை வாங்கிவிட்டு சென்று விட்டார். எங்களுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த பின்பு, எங்களது தாயார் இந்திராணி வழக்குரை 1 முதல் 3 வரையிலான சொத்துக்களை கொடுத்து கடந்த 16.03.1997 அன்று பாண்டிக்கு ஒரு கிரைய ஆவணமூலம் எழுதிக் கொடுத்தார் என்று சொன்னால் சரிதான். அந்த சொத்துக்கான சர்வே எண்கள் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 3வது பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்தில் நானும், எனது சகோதரர் துரைராஜ் சாட்சியாக கையெழுத்து செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. எங்களது தகப்பனார் எங்களது தயாருக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்டுள்ள சரத்துகளுக்கு முரண்பட்டு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ள தான செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றும் அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல.

நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 3வது பிரதிவாதிக்கு கிரைய ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்த விவரம் வாதிகளுக்கு தெரியும்

என்று சொல்லி உள்ள விபரம் சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. அந்த காலகட்டத்தில் வாதிகள் சுந்தரபாண்டியத்தில் இருந்து வந்தார்கள் என்றும், 2 மற்றும் 3 வாதிகள் மைனர்களாக இருந்து வந்ததாலும் அவர்களுக்கு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்த விபரம் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் 1 முதல் 3 வரையிலான சொத்துக்களில் 3 வது பிரதிவாதி ஸ்டார் ஹோட்டல் அமைத்தும், திருமண மண்டபம் அமைத்தும் அனுபவம் செய்து வருகிறார் என்று சொல்வது சரி அல்ல என்று சொன்னால் சரியல்ல. தற்போது வரை மேற்படி 1 முதல் 3 வரையிலான சொத்துக்கள் காலி மனையாக வேலி அமைக்கப்பட்டு இருந்து வருகிறது என்றும், 3 வது பிரதிவாதி சர்வே எண் 278/1 மற்றும் 2 ல் தான் கட்டுமானம் அமைத்து அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. 3 வது பிரதிவாதி கட்டுமானம் கட்டிருக்கும் சொத்துக்கும், வழக்குரை சொத்துக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் திருப்பரங்குன்றம் ஊரில் உள்ள சொத்தில் வீடு கட்டி அனுபவம் செய்து வருவதாக சொல்லி உள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு எழுதி கொடுத்த தான செட்டில்மென்ட் ஆவணத்தில் அழகர் மற்றும் அய்யனார் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரை சொத்துக்கள் என்னுடைய அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லி உள்ளது தவறு என்றும் அது அனைவரின் கூட்டு அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குரை மற்ற சொத்துக்களை உரிமை கொடுக்காமல் வழக்குரை 7 வது சொத்தை பொறுத்து மட்டும் ஆவணம் எழுதும் பொழுது எதற்காக மூன்றில் இரண்டு பங்கு என்று எதற்காக

எழுதினீர்கள் என்றால் அப்பொழுது வாதி அதிக கிரைய தொகை கேட்டதால் எங்களுடைய உரிமையை பொறுத்து மட்டும் நாங்கள் கிரையம் கொடுத்தோம். மேற்படி ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வழக்குரை 7 வது சொத்துக்கான பட்டா தற்போது வரை சுப்பிரமணிய பிள்ளை என்பவரின் பெயரில் தான் இருந்து வருகிறது என்று சொன்னால் சரிதான். அதை கிருஷ்ணன் என்பவர் கிரையம் வாங்கிவிட்டார். வழக்குரை ஏழாவது சொத்தை பொருத்து நானும் எனது சகோதரரும் 4 வது பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

வாதிகளுக்கு வழக்குரை சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்று நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எங்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதிகள் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளார்கள் என்று நான் எதிர்வழக்குரையில் சொல்லி உள்ளது சரியல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகளும் அவரது வாரிசுகளும் வழக்குரை சொத்தில் அவர்களுக்குரிய பங்கை கேட்டார்கள் என்று சொன்னால் கேட்கவில்லை. வாதிகள் பாகம் பிரித்து கேட்டதற்கு நாங்கள் பிரித்துக் கொடுக்க தாமதமானதால், வாதிகள் ஒரு வழக்கறிஞர் அறிவிப்பை கடந்த 20.07.2015 அன்று அனுப்பினார் என்று சொன்னால் சரிதான். அந்த அறிவிப்பை நான் பெற்றுக் கொண்டு பொய்யான சங்கதிகள் கூறி நான் பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியது போலவே 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு வாதிகள் அனுப்பினார்கள் என்றும் அதற்கு 3 மற்றும் 4 பிரதிவாதிகள் எவ்வித பதில் அறிவிப்பும்

அனுப்பவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 7 வழக்குரை சொத்துக்களை வாதிகளுக்கு மூன்றில் ஒரு பங்கு கிடைக்கத்தக்கது என்றும், வாதிகளுடைய பங்கையும் சேர்த்து எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வீட்டு வரி ரசீது ஆவணங்கள் தற்போதைய ஆவணம் என்றும் அதற்கு முந்தைய ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை சொத்துக்கான பட்டா யார் பெயரில் இருந்து வருகிறது என்பதை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வீட்டு வரி ரசீது மற்றும், மின் கட்டண ரசீதுகள் வழக்கிற்காக பின்னிட்டு உற்பத்தி செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்குரை சொத்துக்களில் வாதிகளுக்கு மூன்றில் ஒரு பங்கு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

(7 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு